**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 647/2022**

**வா.சா.1**

**திரு. தேவேந்திரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது ஆதார் அட்டை வா.சா.ஆ.1 ஆகவும், அகழ்வாய்வு எந்திரம் எண்.1 மற்றும் 2 பணி செய்த கால அட்டவணை வா.சா.ஆ.2 ஆகவும், 06-06-2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகவும், அதை 1 முதல் 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் அட்டைகள் வா.சா.ஆ.4 முதல் 7 ஆகவும், 23-06-2022 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி அனுப்பிய நோட்டீஸ் வா.சா.ஆ.8 ஆகவும், KVB வங்கியின் வங்கி கணக்கு விபரம் வா.சா.ஆ.9 ஆகவும், 1ம் பிரதிவாதியின் நிலத்தின் பட்டா மற்றும் "அ" பதிவேடு வா.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். **(வேண்டுகோளின்படி முதல்விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).**